# 10

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

### பங்குடைமை

## பகுதி 1

01) பின்வரும் கூற்றுக்களில் பங்குடமை வியாபாரம் தொடர்பான சரியான கூற்றாவது.
1. பங்காளரின் மூலதனத்திற்கு வட்டி பெறும் உரிமை கிடையாது.
2. பங்குடமை கட்டளைச்சட்டத்திற்கு ஏற்ப முகாமை செயற்பாடுகளில் ஈடுபடும் பங்காளருக்கு சம்பளத்தைப் பெறும் உரிமை உண்டு.
3. பங்குதாரருக்கு எப்போதும் மூலதனத்திற்குப் புறம்பாக மேலதிகமாக வழங்கப்படுகின்ற கடனுக்கு 5% வட்டியைப் பெறும் உரிமை உண்டு.
4. பங்குதாரருக்கு எந்தவித பற்றும் பெற முடியாது.
5. பங்குடமை வியாபாரத்தின் நாளாந்த செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது பங்குடமை சட்டமாகும்.

02) பின்வரும் கூற்றுக்களில் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 வது சரத்திற்கு ஏற்ப பொய்யான கூற்றாவது.
1. பங்குதாரர்களால் பங்குடமைக்கு வழங்கப்பட்ட கடனுக்கு 5% வட்டி பெற்றுக் கொள்ளலாம்.
2. பங்குதாரருக்கு சம்பளம் பெற முடியாது.
3. பங்காளர்களால் பங்குடமை முகாமை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தரகு பெறலாம்.
4. நிறுவனத்தின் செலவு ஒன்றை பங்குதாரரால் ஏற்றுக்கொண்டபோது அதை மீளச் செலுத்தப்பட வேண்டும்.
5. பங்குடமை வியாபாரத்தின் செயற்பாடுகளில் எல்லாப் பங்குதாரர்களும் ஒரே அளவில் பங்களிப்பு செய்ய வேண்டியதுடன் இலாப நட்டங்களும் சமமாக பகிரப்பட வேண்டும்.

03) டீன் மற்றும் நீல் பங்குடமை வியாபாரம் ஒன்றை நடாத்தி செல்வதுடன் இலாப நட்டங்களை 5:3 என்ற அடிப்படையில் பகிர்ந்துக் கொள்கின்றனர். அவர்களுடைய மூலதனம் மற்றும் நடைமுறைக்கணக்கு மீதி 2021.04.01 ஆம் திகதியில் பின்வருமாறு

| விபரம் | டீன் (ரூபா.000) | நீல் (ரூபா.000) |
|---|---|---|
| மூலதனக்கணக்கு | 500 | 300 |
| நடைமுறைக்கணக்கு | 50 | 80 |

எல்லாப் பங்குதாரர்களுக்கும் 10% மூலதன வட்டியும் ரூபா.30,000 மாதாந்த சம்பளமும் உரித்துடையவர். பதிவுசெய்யப்பட்ட பங்குதாரர்களின் பற்று டீன் ரூபா.20 000, நீல் ரூபா.30 000 ஆகும். 2021.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான பகிர்வுக்கு முன் இலாபம் ரூபா.28000000 ஆகும்.

2021.03.31 இன் டீன் மற்றும் நீலின் நடைமுறைக்கணக்கு மீதி பின்வருமாறு.
1. டீன் ரூபா.1380 நீல் ரூபா.890
2. டீன் ரூபா.1130 நீல் ரூபா.1150

BUSINESS & COMMERCE BRANCH

3. டீன் ரூபா.1710 நீல் ரூபா.1120
4. டீன் ரூபா.1690 நீல் ரூபா.1180
5. டீன் ரூபா.1150 நீல் ரூபா.750

04) வினா இலக்கம் 4,5,6 க்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.
அசோக்,நிஷா,லலிதா பங்குடமையின் 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான நடைமுறைக்கணக்கு பின்வருமாறு.

| | அசோக் | நிஷா | லலிதா | | அசோக் | நிஷா | லலிதா |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | | | 10 | மீதி | 20 | 40 | |
| பற்று | 100 | 150 | 90 | மூலதன வட்டி | 40 | 60 | 40 |
| | | | | சம்பளம் | | | 480 |
| | | | | இலாபப்பங்கு | | | 52 |
| மீ.கீ.கொ.செ | 700 | 536 | 472 | | | | |
| | 800 | 736 | 572 | | 800 | 736 | 572 |
| | | | | மீ.கீ.கொ.வ | 700 | 536 | 472 |

மேலதிக தகவல்கள்
பங்குடமை வியாபாரத்தின் இலாபத்தை கணிப்பிடும் போது அசோக் மற்றும் நிஷா பெற்றுக் கொண்ட ரூபா.20 000 மற்றும் ரூபா.40 000 பொருட்கள் பற்றியது பதிவு செய்யப்படவில்லை.

4. பங்குடமையின் சரியான இலாபத்தைக் கணிக்க.
5. பங்குடமை வியாபாரத்தின் மொத்த மூலதனத்தைக் கணிப்பிடுக.
6. 2022.03.31 இன் முடிவடைந்த வருடத்திற்கான நிஷாவின் மொத்த உரிமை யாது?

BUSINESS & COMMERCE BRANCH